www.agaram.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடக்கு மாகாணம்

**தரம் 10**

**மூன்றாம் தவணைப்பரீட்சை - 2018**

வரலாறு II

**நேரம் : மூன்று மணித்தியாலம்**

**கவனிக்குக.**

- பகுதி I இன் முதலாம் வினா கட்டாயமானது
- பகுதி II இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி I

*01.* அ. கீழே (I) இல் குறிப்பிடப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்திலும் (II) இல் குறிப்பிடப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்திலும் குறித்துப் பெயரிடுக

i. கும்புக்கன் ஓயா ஹெமன்ஹயில், கலாவாவி, இப்பன்கட்டுவ பெட்ரிக்கோட்டை, தெவிநுவர, ஜம்புகோளப்பட்டினம், கசப நகரம் யாப்பகுவ, களுகங்கை, கம்பளை, நீர்கொழும்பு (12 புள்ளிகள்)

ii. பத்தேவியா, போர்த்துக்கல், செங்கடல், கள்ளிக்கோட்டை, ரோம், பிரித்தானியா (6 புள்ளிகள்)

ஆ.i. கீழே A, B, C, D, ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. காரண காரிய அடிப்படையில் செயற்பட்ட கிராம வகைகளில் துறைமுகத்தை அண்டிய கிராமம் எவ்வாறு அழைக்கப்பட்டது

B. இலங்கையில் கிடைக்கப்பெற்ற மிகப்புராதன நாணயத்தின் பெயர்

C. தனது பத்தாவது ஆட்சி வருடத்தில் கிராமங்களுக்கு எல்லைகள் வகுத்த இலங்கை ஆட்சியாளன்

D. இலம்ப கர்ண வம்சத்தின் முதல் ஆட்சியாளன் (4 புள்ளிகள்)

ஆ. ii. 1. படம் Aயில் காட்டப்பட்டிருப்பது யாது?

2. இது கண்டெடுக்கப்பட்ட இடத்தின் பெயர் யாது?

3. இது இலங்கையின் எக்காலப் பகுதிக்குரியது

4. இது இலங்கையில் ஆதிகாலம் தொட்டு எத்தொழில்நுட்பம் இருந்தது என்பதற்கு ஆதாரமாக உள்ளது.

(4 புள்ளிகள்)



A



agaram.lk

iii. 1. இந்த நிர்மாணிப்பின் பெயர் யாது?

2. இது எந்த மன்னனால் கட்டப்பட்டது

3. இது இலங்கையில் எந்த நகரக்காலப்பகுதிக்குரியது

4. இந்த நிர்மாணிப்பின் சிறப்பு அம்சம் ஒன்று தருக

(4 புள்ளிகள்)



B

## பகுதி II

2. i. இலங்கை வரலாற்றை அறிவதற்காக இலங்கைக்கு வருகை தந்தவர்களிடம் இருந்து கேட்டறிந்து எழுதிய எழுத்தாளர்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவர்களுடைய தேசங்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக

A. அரிஸ்டோட்டில்

B. பர்னாவோ குவேரோஸ்

C. ஹியுங் சாங்

(3 புள்ளிகள்)

(உரோமபுரி, கிரேக்கம், ஒல்லாந்து, போர்த்துக்கல், சீனா )

ii. இராசரட்டைக் கால வரலாற்றை அறிய உதவும் நூல்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

iii.a. சாசனங்கள் என்றால் என்ன?

(3 புள்ளிகள்)

b. எழுதப்பட்ட கருங்கல்லின் அமைப்பிற்கேற்ப கல்வெட்டுக்களின் நான்கு வகைகளையும் குறிப்பிடுக

(2 புள்ளிகள்)

iv. வரலாற்றினைக் கற்பதன் முக்கியத்துவம் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றினை சுருக்கமாக விளக்குக

(6 புள்ளிகள்)

3. i. இலங்கையில் கற்கால மனிதர்கள் வாழ்ந்த மூன்று காலநிலை வலயங்களைக் குறிப்பிடுக

(3 புள்ளிகள்)

ii. பின்வரும் A, B, C, மற்றும் D கூற்றுக்களுக்கு பொருத்தமான விடைகளை ஒழுங்கு முறைப்படி எழுதுக.

ii. A. கற்கால மனிதன் மரணச்சடங்கு முறையில் ஈடுபட்டமைக்கு தெளிவான சான்றாக அகழ்வின் போது இரண்டாகப் பிளக்கும் வகையில் துளையிடப்பட்ட மண்டையோடு ஒன்று கிடைக்கப் பெற்ற குகை.

B. காலக் கணிப்பீட்டின்படி 1.25.000 ஆண்டுகள் பழமையான இரணைமடுப் படிவுக்குரிய சரளைக் கற்படிவு ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ள இடம்.

C. தாழ்நில ஈரவலயத்தில் வாழ்ந்த மக்கள் அதிகம் விரும்பி உட்கொண்ட உணவு

D. 12500 ஆண்டுகளுக்கு முன்னர் காட்டுப்பலாவின் விதைகளை தீயில் சுட்டு சாப்பிட்டமைக்கான ஆதாரம் கிடைத்துள்ள குகை

(4 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

iii. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் உடலமைப்பு தொடர்பாக இரண்டு அம்சங்களைக் குறிப்பிட்டு விளக்குக (5 புள்ளிகள்)

iv. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து முன் வரலாற்றுக்காலம் வேறுபடுவதனை இரண்டு காரணங்களின் அடிப்படையில் விளக்குக

(6 புள்ளிகள்)

4. i. பின்வரும் பணிகளுடன் தொடர்புடையவர்களின் பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்துதெரிவு செய்து எழுதுக

A. பொருளாளர் B. குதிரைப் பிரிவின் தலைவர்

C. காசு அச்சிடும் பிரிவின் தலைவர்

(ஹதி அதெக, அச அதெக, கொதுறு கேனா, ரூப அதெக, படகரிக)

(3 புள்ளிகள்)

ii. பல்வேறு தொழில்களை மேற்கொண்ட மக்கள் தமது தொழில் ரீதியாக ஒன்றுபட்டு வாழ்ந்த குளக்குடியிருப்புக்கள் A, B, C, D என்பவற்றால் தரப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்களை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. குயவர் வாழ்ந்த கிராமம் B. விவசாயிகள் வாழ்ந்த கிராமம்

C. தச்சர் வாழ்ந்த கிராமம் D. இரத்தினம் அகழ்வோர் வாழ்ந்த கிராமம்

(4 புள்ளிகள்)

iii. புராதன இலங்கையில் கிராமியத் தலைவர்களினால் ஆற்றப்பட்ட இரண்டு பணிகளைக் குறிப்பிட்டு அவற்றினை விளக்குக

(5 புள்ளிகள்)

iv. இலங்கை ஆட்சியாளர்களுள் 1ம் விஜயபாகு மன்னன் சிறப்பான ஒருவர் என்பதனை மூன்று விடயங்களின் அடிப்படையில் விளக்குக

(6 புள்ளிகள்)

5. i. பின்வரும் இராசரட்டைக்கால நூல்கள் எந்த மொழிகளில் எழுதப்பட்டவை என்பதனை A, B, C ஒழுங்கில் குறிப்பிடுக

A. ஜானகி ஹரணய B. தீபவம்சம்

C. சியபஸ்லகர

(3 புள்ளிகள்)

ii. பின்வரும் A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்ட வினாக்களுக்கான விடைகளை ஒழுங்கு முறைப்படி எழுதுக

A. சேனைப் பயிர்ச் செய்கையின் போது உயர் மரம் ஒன்றில் கட்டப்பட்ட சிறு குடிசைக்கு வழங்கப்பட்ட பெயர்

B. கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் கெதிஅட கெடுகனக ஆகிய இரு சேனை வரிகளையும் நீக்கிய மன்னன்

C. புராதன காலத்தில் அம்பு எய்தும் கலையை கற்பிக்கும் ஆசிரியர் அழைக்கப்பட்ட பெயர்

D. ஹோரப்பிட்டிகம சந்தை நிர்வாகம் பற்றிக் குறிப்பிடும் மூன்றாம் உதய மன்னனால் அமைக்கப்பட்ட கல்வெட்டு

(4 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

iii. இலங்கையில் புராதன காலத்தில் பௌத்தம் மற்றும் இந்து சமயம் தவிர்ந்த வேறு இரு சமயங்கள் நிலவி இருந்தமைக்கு இருசான்றுகளை ஆதாரமாகக் கொண்டு விளக்குக

(5 புள்ளிகள்)

iv. பண்டைய காலத்தில் இருந்தே இலங்கையில் கைத்தொழில் முன்னேற்றம் அடைந்திருந்தது என்பதனை மூன்று விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக

(6 புள்ளிகள்)

6. i. பின்வரும் குளங்களை கட்டிய மன்னர்களின் பெயர்களை A, B, C ஒழுங்கு முறையில் எழுதுக

A. நாச்சதுவவாவி B. திஸ்ஸ மகராமக்குளம் C. கவுடுலு வாவி

(3 புள்ளிகள்)

ii. பின்வருவனவற்றுள் A, B, C மற்றும் D ஆகியவற்றுக்கான விடைகளை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக

A. பண்டைய கல்வெட்டுக்களில் “ரஜ மொஹால்” என அழைக்கப்பட்ட குளத்தின் கூறு

B. கி.பி 2ம் நூற்றாண்டில் கால்வாய்களை அமைப்பதில் ஈடுபட்ட அதிகாரிக்கு வழங்கிய பெயர்

C. நீர் அலைகளினால் ஏற்படும் அமுக்கத்தினால் அணைக்கட்டு அரிப்புறுவதைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட குளத்தின் கூறு

D. புராதன காலத்தில் குடிநீரின் தரத்தைப் பேணுவதற்கு கிணறுகளை வெட்டும் போது மட்பாண்டங்கள் பலவற்றை கிணற்றுக்குள் புதைத்து கிணற்றின் சுவரை மூடி அமைக்கப்பட்ட கிணறுகளுக்கு வழங்கிய பெயர்

(குளக்கட்டு, கலிங்கல், அலைதாங்கி, ரஜ மொஹால், அடிக, உளராகெட, தண்ணீர் விளக்கு)

(4 புள்ளிகள்)

iii. பண்டைய காலத்தில் சூழலுக்கு தீமை பயக்காத வகையில் கழிவுகளை வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தமையை இரு உதாரணங்கள் மூலம் விளக்குக.

(5 புள்ளிகள்)

iv. புராதன காலத்தில் இரும்பை பிரித்தெடுக்கும் தொழில்நுட்பம் எவ்வாறானது என்பதை இரண்டு வரலாற்றுச் சந்தர்ப்பங்களின் உதவியுடன் சுருக்கமாக விளக்குக

(6 புள்ளிகள்)

7. i. பின்வரும் A, B, C ஆகிய கூற்றுக்களுக்குரிய மன்னர்களை ஒழுங்கு முறைப்படி எழுதுக

A. எருமை, பசு, ஆடு என்பவற்றைக் கொல்வோருக்கு மரண தண்டனை விதிக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்திய மன்னன்

B. அரச அதிகாரிகளினால் அளவு குறிக்கப்படாத தராசுகள் கொண்டு வியாபாரம் செய்தல் ஆகாது எனச் சட்டம் இயற்றிய மன்னன்

C. மிருகங்களை எவரும் கொல்லக் கூடாதென முதன் முதல் சட்டம் இயற்றிய மன்னன்

(3 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

ii. பின்வரும் வரலாற்று நிகழ்வுகள் எந்த இராசதானிக் காலத்தில் இடம்பெற்றது என A, B, C, D ஒழுங்கில் எழுதுக

A. தலதாசிரித, சிங்கள போதிவம்சம் ஆகிய நூல்கள் எழுதப்பட்டமை

B. தந்தை வழி அரசுரிமைக்கு பதிலாக தாய் வழி அரசுரிமை மாற்றமடைந்தமை

C. பஸ்துன் கோராளைப் பகுதியில் சிங்கள சங்கய என்னும் அரசியல் கிளர்ச்சி ஒன்று அரசனுக்கு எதிராக இடம்பெற்றமை

D. எகிப்துக்கு அனுப்பப்பட்ட வர்த்தக தூதுக்குழுவினர் கி.பி 1283 இல் கெய்ரோ நகரில் எகிப்திய சுல்தனால் வரவேற்கப்பட்டமை (4 புள்ளிகள்)

iii. இரண்டாம் பராக்கிரமபாகுவின் அரசியல் நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக

(5 புள்ளிகள்)

iv. இரண்டாவது நகரமயமாக்கல் காலத்தில் வெளிநாட்டு வர்த்தகம் சிறப்புற்று இருந்தது என்பதனை மூன்று விடயங்களின் அடிப்படையில் விளக்குக

(6 புள்ளிகள்)

8. i. கண்டி இராச்சியத்தின் அரச மாளிகைச் செயற்பாடுகளை நடத்திச் செல்வதற்கு நியமிக்கப்பட்ட பொறுப்பதிகாரிகளை A, B, C ஒழுங்கில் குறிப்பிடுக.

A. தந்ததாதுவிக்கு பொறுப்பானவர் B. ஆடையணிகளுக்கு பொறுப்பானவர்

C. உணவு வழங்குதலுக்கு பொறுப்பானவர்

(3 புள்ளிகள்)

ii. கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்த நாயக்கர் வம்சத்து ஆட்சியாளர்கள் நால்வரையும் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

iii. கண்டி இராசதானியில் வரி(பத்தே) வசூலிப்பு இறுதிக்காலத்தில் திசாவை மாரின் கீழ் செயற்பட்டது. இந்த அமைப்பின் ஐந்து பிரிவுகளையும் எழுதுக (5 புள்ளிகள்)

iv. கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் பௌத்த சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றினைக் கூறி சுருக்கமாக விளக்குக (6 புள்ளிகள்)

9. i. மறுமலர்ச்சிக் காலத்தில் இலக்கியத்துறைக்குப் பணியாற்றிய பின்வரும் எழுத்தாளர்களின் நாடுகளைக் குறிப்பிடுக.

A. பெற்றாக் B. வில்லியம் ஷேக்ஸ் பியர் C. இராஸ்மஸ்

(3 புள்ளிகள்)

ii. மறுமலர்ச்சிக் காலத்தில் பின்வரும் கண்டு பிடிப்பாளர்களுடன் தொடர்புடைய கண்டுபிடிப்புக்களை A, B, C, D ஒழுங்கில் எழுதுக.

A. வில்லியம் ஹாவே B. ஜொஹேன்ஸ் கூடன் பேக்

C. கலிலியோகலிலி D. ஐசக் நியுட்டன்

(4 புள்ளிகள்)

iii. a. மறுமலர்ச்சிக் காலத்தில் பின்வரும் இரு நாடுகளையும் கண்டு பிடித்த நாடுகாண் பயணிகளைக் குறிப்பிடுக

1. மேற்கு இந்தியத்தீவுகள் 2. பிலிப்பைன்ஸ் (2 புள்ளிகள்)

b. புதிய கடல் வழிகளைக் கண்டு பிடிக்கக்கூடிய சாதகமான சூழல் 15ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் நிலவியது அவ்வாறான சூழற் காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக

(3 புள்ளிகள்)

iv. மறுமலர்ச்சி இலங்கை மீது செலுத்திய தாக்கத்தினால் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

(6 புள்ளிகள்)



agaram.lk


Agaram.LK - Keep your dreams alive!

**மாகாணக் கல்வித் திணைக்களம்**

**வடக்கு மாகாணம்**

அ.I

சுட்டெண் : .................



Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!



ஏ.II

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk